


மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (03.05.2025) சென்னை மருத்துவக்கல்லூரி சார்பாக நடைபெற்ற தேசிய அளவிலான மருத்துவக் கல்வி மாநாட்டினை தொடங்கி வைத்து, போட்டியில் வெற்றி பெற்ற மருத்துவ மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி, சிறப்பித்து, விழா பேருரையாற்றினார். இந்நிகழ்வில் முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், இயக்குநர்கள் மரு.அருண்தம்புராஜ், மரு.தேரணிராஜன், தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணைய உறுப்பினர் செயலாளர் மரு.கோபாலகிருஷ்ணன், சென்னை மருத்துவக்கல்லூரி துணை முதல்வர் மரு.கவிதா மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியத்திற்குட்பட்ட காட்டுப்பாக்கம் பகுதியில் அரசாணிமங்கலம் உத்திரமேரூர் செல்லும் சாலையில் இரண்டு இடங்களில் விரிவான சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 5.88கோடி மதிப்பில் உயர்மட்ட பாலம் அமைக்கப்பட்டு வரும் பணியினை காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன், பேரூர் செயலாளர் பாரி வள்ளல், பேரூராட்சி மன்றத் தலைவர் எஸ்.சசிகுமார், ஒன்றிய குழு உறுப்பினர் கலைசெல்வி உமாபதி, ஊராட்சி மன்ற சாந்தி தலைவர் கிருஷ்ணன்,உள்ளாட்சி பிரதிநிதிகள், திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## இந்த நான்கு ஆண்டுகளில் மருத்துவத்துறையில்

# 25,295 மருத்துவம் சார்ந்த பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, மே 4-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (03.05.2025) சென்னை மருத்துவக்கல்லூரி சார்பாக நடைபெற்ற தேசிய அளவிலான மருத்துவக் கல்வி மாநாட்டினை தொடங்கி வைத்து, போட்டியில் வெற்றி பெற்ற மருத்துவ மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி, சிறப்பித்து, விழா பேருரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரை வருமாறு:

**மருத்துவக் கட்டமைப்பு**

தமிழ்நாட்டில் மருத்துவக்கட்டமைப்பு என்பது மிகப்பெரிய அளவில் இந்தியா மட்டுமல்ல உலக நாடுகளே பாராட்டும் வகையிலான மருத்துவக் கட்டமைப்பு தமிழ்நாட்டில் உள்ளது. 8713 துணை சுகாதார நிலையங்கள், 2286 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களும், 279 வட்டார மருத்துவமனைகளும், 37 மாவட்ட அரசு தலைமை மருத்துவ மனைகளும், 36 மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளும், 22 இந்திய மருத்துவத்துறை சார்ந்த மருத்துவமனைகளும், 3 பல் மருத்துவக்கல்லூரிகளும், 2 பன்னோக்கு மருத்துவமனைகள் என்று ஏறத்தாழ 11876 மருத்துவக் கட்டமைப்புகள் தமிழ்நாட்டில் இருந்து வருகிறது.

இந்தியாவில் 36 மாநிலங்கள் இருந்தாலும்கூட, இந்த அளவிற்கு மருத்துவக் கட்டமைப்புகள் இருக்கின்ற மாநிலம் தமிழ்நாடு என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அந்த வகையில் இந்த மருத்துவக் கட்டமைப்பு பல்வேறு வகைகளில் சாதனை படைத்து வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2021 ஆகஸ்ட் திங்கள் 5 ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளியில் மக்களைத் தேடி மருத்துவம் எனும் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள மக்களைத் தேடி, அதாவது நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், பிசியோ தெரபி, டயாலிசிஸ் போன்ற நோய்களுக்கு வீடுகளைத் தேடி சென்று மருத்துவம் இந்த திட்டத்தின் நோக்கமாகும். முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தில் ஒரு கோடி பயனாளிகளை இணைக்க வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தார்கள். ஆனால் இந்த திட்டத்தில் தற்போது 2 கோடி 4 இலட்சம் பயனாளிகளை கடந்து வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகிறது. அதனால்தான் ஐ.நா மன்றம் கடந்த செப்டம்பர் திங்கள் 25-ஆம் தேதி அமெரிக்காவில் உள்ள நியூயார்க் பொது சபை கூட்டத்தில் உலக நாடுகளில் தொற்றா நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதில் எந்த பகுதி சிறப்பாக சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது என்று ஆராய்ந்த போது தமிழ்நாடு மிகச் சிறப்பாக செய்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்து தமிழ்நாடு மருத்துவத்துறைக்கு 2024-ஆம் ஆண்டிற்கான உலகளாவிய விருது United Nation Intergracy Task Force Award விருது ஐ.நா சபையால் வழங்கப்பட்டிருக்கிறது.

மேலும் இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48, இதயம் காப்போம், சிறுநீரகம் பாதுகாப்போம் திட்டம், பாதம் காப்போம் திட்டம், நடப்போம் நலம் பெறுவோம், மக்களைத் தேடி ஆய்வகம் திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவம் திட்டம், செயற்கை கருத்தரித்தல் மையங்கள் என்று பல சிறப்புக்குரிய திட்டங்கள் தமிழ்நாட்டில் நடைமுறையில் இருந்து வருகிறது.

நேற்று முன்தினம் புனேவில் இந்திய மருத்துவத்திற்கான மாநாட்டில் நமது துறையின் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார் சென்றிருந்தார்கள். நேற்றுக் காலை அவரிடம் பேசிக்கொண்டிருந்த போது அவர் சொன்ன நல்ல விஷயம், இந்தியா முழுமைக்கும் உள்ள அமைச்சர்கள், அலுவலர்களிடத்தில் தமிழ்நாட்டில் குறிப்பாக ஆயுஷ் (சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஹோமியோபதி, யோகா) போன்ற பல்வேறு இந்திய மருத்துவத்துறையில் நாம் செய்து வரும் நல்ல விஷயங்களை அங்கே பட்டியலிட்டு காட்டச் சொன்னதாக தெரிவித்தார்கள். தமிழ்நாடு மருத்துவக்கட்டமைப்பில் மட்டுமல்ல, இந்திய மருத்துவத்திற்கும் கூட ஒரு சிறந்த நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த மாநாட்டினை மருத்துவர் தேரணிராஜன் அவர்கள் மிகச் சிறப்பான வகையில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக 2000த்திற்கும் மேற்பட்ட மருத்துவக்கல்லூரி மாணவர்களை ஒரே இடத்தில் அமர வைத்து அவர்களை பயிற்றுவிப்பதாக இருந்தாலும் ஒரு இடத்தில் மாணவர்களை ஒருசேர நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்துவது என்பது யாரும் நினைத்து பார்க்க முடியாக விஷயமாகும்.

**பணியிடங்கள் மற்றும் கலந்தாய்வு**

இந்த அரசு பொறுப்பேற்றபிறகு மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக இதுவரை 25,295 மருத்துவம் சார்ந்த பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கிறது. மேலும் கடந்த மாதம் 48 பல் மருத்துவர்களுக்கு தேர்வு நடைபெற்றது. இந்த 48 பணியிடங்களுக்கு இதுவரை 11,720 பேர் தேர்வு எழுதியிருக்கிறார்கள். இதில் தேர்ச்சி பெற்றவர்கள் ஏறத்தாழ 8,000த்திற்கும் மேற்பட்டவர்கள். இவர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு, இட ஒதுக்கீடு அடிப்படையில் 48 பணியிடங்கள் தேர்வு செய்யப்படும். அந்த அளவிற்கு வெளிப்படைத்தன்மையுடன் மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக பணியிடம் நிரப்பப்பட்டு வருகிறது.

அண்மையில் 2,642 மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்பட்டது. அதாவது இந்தியாவில் முதன்முறையாக அவரவர் விரும்பும் இடங்களுக்கே கலந்தாய்வு நடத்தி பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த 4 ஆண்டுகளில் 42,718 பேருக்கு வெளிப்படைத் தன்மை யுடன் கலந்தாய்வு நடத்தப்பட்டு பணிமாறுதல்கள் வழங்கப்பட்டுள்ளது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் விழா பேருரையாற்றினார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. அருண்தம்புராஜ், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி கூடுதல் இயக்குநர் மரு.தேரணிராஜன், தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணைய உறுப்பினர் செயலாளர் மரு.கோபாலகிருஷ்ணன், சென்னை மருத்துவக்கல்லூரி துணை முதல்வர் மரு.கவிதா மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. தணிக்கைக் குழுக் கூட்டம்!

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., அறிவிப்பு!

தி.மு.க. தணிக்கைக்குழுக் கூட்டம், வருகிற 2025 மே 13, 14, 15 (செவ்வாய், புதன், வியாழன்) ஆகிய நாட்களில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும்

அதுபோது தணிக்கைக் குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**டி.ஆர்.பாலு எம்.பி.**
பொருளாளர்
தி.மு.க.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018
நாள்- 03.05.2025



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 40வது வட்ட கழக சார்பாக நீர் மோர் தண்ணீர் பந்தல் திறப்பு விழா வட்டச் செயலாளர் நா.கோதண்டன் தலைமையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, திறந்து வைத்தார். ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, இரா.லட்சுமணன், ஆர்.வெற்றிவீரன், என். மருதுகணேஷ், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், வெ.சத்யநாராயணன், சி.மணிகண்டன், க.முத்தமிழ்செல்வன், என்.பிரேமராசன், எம்.எம்.சாமி, டி.ஆர்.தணிகாசலம், பி.அன்பு, இரா. சீமான், எம்.எஸ்.ரவி, மு.சா.ஹரித்குமார், கு.கலா, க.ஹேமந்தகுமார், தி.விஜயகுமார், ஆர்.வெங்கட், ஆர். பத்மநாபன், எஸ்.எம்.முருகன், என்.டேனியல், மற்றும் மாவட்ட கழக பகுதி வட்டக் கழக சார்பு மன்ற மகளிர் அணி இளைஞரணி மாணவரணி அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய இளைஞரணி கலந்தாய்வு கூட்டம் அயப்பாக்கத்தில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இரா. வினோத் தலைமையில் ஒன்றிய துணை அமைப்பாளர்கள் எஸ்.பி. முரளிகிருஷ்ணன், எம்.சபரிராஜா,எஸ். ஜனார்தனம்,பி. மனிஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமண,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச.சங்கர் கணேஷ் எம். சி.ஆகியோர் ஆலோசனை வழங்கினர்.இதில் ஒன்றிய கழக நிர்வாகிகள்,துணை அமைப்பாளர்கள், கிளை கழக செயலாளர்கள், கிளை இளைஞரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## மாணவர்களின் இடைநிற்றலுக்கு வழிவகுக்கும்!

# கல்வியில் காவிச்சாயம் பூசும் மோடி அரசு!

### 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

சென்னை, மே 4-

'தினகரன்' நாளேடு ஒன்றிய மோடி அரசின் 2020 புதிய கல்விக் கொள்கை குறித்து கருத்து தெரிவித்துள்ளது. இதனால் மாணவர்களின் எதிர்காலம், இடைநிற்றலும் கேள்விக் குறியாகி விடும் கல்வியில் காவிச்சாயம் பூசும் முயற்சியில் மோடி அரசு ஈடுபட்டுள்ளது. எதிர்கால சந்ததியினரை அழிக்கும் செயல் என குற்றம் சுமத்தியுள்ளது.

அது வருமாறு:-

ஒன்றிய அரசின் புதிய தேசிய கல்விக் । கொள்கை என்பது தொடக்கத்தில் இருந்தே சர்ச்சையாகி வருகிறது. தேசியக் கல்விக் கொள்கை வரைவு வெளியிடப்பட்ட பிறகு நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அரசியல் கட்சியினர், சமூக செயல்பாட்டாளர்கள், கல்வியாளர்கள், மாணவர் அமைப்பினர், ஆசிரியர்கள் என பல்வேறு தரப்பிளரும் அந்த வரைவு அறிக்கைக்கு எதிராக போர்க்கொடி தூக்கியதோடு பல்வேறு மாற்றங்களையும் முன் வைத்தனர். ஏறக்குறைய நாடு முழுவதும் இருந்து 2.25 லட்சம் கருத்துகள் அனுப்பப்பட்டன. ஆனால் எந்த கருத்தையும் விவாதிக்காமல் ஒன் றிய அரசு அமல்படுத்தியது.

குறைந்த பட்சம் நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக சிறு விவாதம்கூட நடத்தாமல் கொரோனா முடக்கத்தை காரணம் காட்டி அமைச்சரவையை கூட்டி புதிய தேசிய கல்விக்கொள்கைக்கு ஒப் புதல் பெற்று தவறான முன் உதாரணத்திற்கு வழிவகுத்தது. தேசியக் கல்விக்கொள்கையை தமிழ்நாடு உள்பட பல்வேறு மாநிலங்கள் கடுமையாக எதிர்த்து வருகின்றன. குறிப்பாக தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், "தேசியக் கல்விக் கொள்கை என்பது சமூக நீதிக்கும், தமிழுக்கும் வேட்டு வைக்கும் கொள்கை. தமிழர்களுக்கும் தமிழ்நாட்டுக்கும் வேட்டு வைக்கும் கொள்கையை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது" என தொடர்ந்து கடுமையாக எதிர்த்து வருகின்றார்.

தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளவில்லை என்ற ஒரே காரணத்திற்காக அனைவருக்கும் கல்வி இயக்க திட்டத்தின் கீழ் ஒதுக்க வேண்டிய நிதியை கூட ஒன்றிய அரசு நிறுத்தி வைத்தது. கல்வியில் காவி சாயத்தை பூச முயற்சிப்பது, குலக் கல்வித் திட்டத்தை மறைமுகமாக புகுத்த நினைப்பது, மும்மொழி கொள்கை என்ற பெயரில் இந்தியை கட்டாயமாக்குவது என பல்வேறு விமர்சனங் களும், குற்றச்சாட்டுகளும் ஒன்றிய அரசின் மீது அடுக்கடுக்காக வைக்கப்பட்டு வருகின்றது.

இந்த சூழலில்தான் தேசியக் கல்விக்கொள்கை 2020ன்படி பொதுத்தேர்வில் 30 சதவீதத்திற்கும் குறைவான மதிப்பெண் எடுத்தால் 3,5,8ம் வகுப் பில் பெயில் என்ற நடைமுறை சிபிஎஸ்இ பள்ளிகளில் தற்போது கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கு முன்பு கட்டாய கல்வி உரிமை சட்டத்தின் கீழ் இருந்து வந்த 8ம் வகுப்பு வரை கட்டாயம் பாஸ் என்ற முறை மாற்றப்பட்டு தற்போது இந்த புதிய நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது.



தினகரன்
மே 3, 2025 சனிக்கிழமை

இடைநிற்றலுக்கு வழி

ஒன்றிய அரசின் புதிய தேசிய கல்விக் கொள்கை என்பது தொடக்கத்தில் இருந்தே சர்ச்சையாகி வருகிறது. தேசியக் கல்விக்கொள்கை வரைவு வெளியிடப்பட்ட பிறகு நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அரசியல் கட்சியினர், சமூக செயல்பாட்டாளர்கள், கல்வியாளர்கள், மாணவர் அமைப்பினர், ஆசிரியர்கள் என பல்வேறு தரப்பினரும் அந்த வரைவு அறிக்கைக்கு எதிராக போர்க்கொடி தூக்கியதோடு பல்வேறு மாற்றங்களையும் முன் வைத்தனர். ஏறக்குறைய நாடு முழுவதும் இருந்து 2.25 லட்சம் கருத்துகள் அனுப்பப்பட்டன. ஆனால் எந்த கருத்தையும் விவாதிக்காமல் ஒன்றிய அரசு அமல்படுத்தியது.

குறைந்த பட்சம் நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக சிறு விவாதம்கூட நடத்தாமல் கொரோனா

அதோடு மட்டுமல்லாது தங்களின் குழந்தை குறைவான மதிப்பெண் எடுத்தால் பெயில் ஆக்க சம்மதிப்பதாக பெற்றோர்களிடமே சிபி. எஸ்.இ பள்ளிகள் ஒப்புதல் கடிதம் பெற்று வருவது கொடுமையிலும் கொடுமை. 3ம் வகுப்பு குழந்தையை பெயில் ஆக்கும் போது தன்னோடு படித்த அனைவரும் அடுத்த வகுப்பிற்கு சென்று தான் மட்டும் அதே வகுப்பில் படிக்கும் போது அந்த குழந்தையின் மனநிலை எப்படி இருக்கும்? அது எந்த மாதிரியான விளைவுகளையும், மன அழுத்தத்தையும் உண்டாக்கும் என்ற அடிப்படை புரிதல்கூட இல்லாமல் இந்த நடைமுறையை கொண்டு வந்திருப்பது ஏற்கமுடியாததாக உள்ளது. மேலும் இந்த நடைமுறை மாணவ, மாணவிகளின் இடைநிற்றலுக்கு வழிவகுப்பதோடு குழந்தைகளின் எதிர்காலத்தையும் பாதிக்கச்செய்யும் என்பது தான் உண்மை.

இவ்வாறு "தினகரன்" நாளேடு மோடி அரசுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

## திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு!

கிழக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து. வருகிற 2025, மே 3 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். " என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கு டி.ஜே.கோவிந்தராஜன் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

**திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக,**
**திரு. டி.ஜே. கோவிந்தராஜன்**

175, ஜி.என்.டி.சாலை, கவரைப்பேட்டை, கும்முடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் - 601 206. **அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 03.05.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## சென்னை வடக்கு மாவட்ட

# பகுதிச் செயலாளர்கள் கூட்டம்!

### மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடக்கு மாவட்ட பகுதி செயலாளர்கள் கூட்டம் இன்று (04-05-2025 -ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணியளவில், எண்.1, சர்மா நகர் 1வது மெயின் ரோட்டில் உள்ள (எனது அலுவலகத்தில்) மாவட்ட அவைத்தலைவர் ஆர்.வெற்றிவீரன் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொருள்:1. கழகஆக்க பணிகள்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**
பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.



தாம்பரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியில் இருந்து எஸ்.ஆர்.ராஜா அகரம்தென் ஊராட்சியின் வளர்ச்சி பணிகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் துவங்கப்பட உள்ளது. மேலும் அகரம்தென் ஊராட்சியில் கிராம சபை கூட்டத்தில் கலந்து கொண்டு பொதுமக்கள் வழங்கிய கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார். அதுபோது அதிகார்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.